## குயவன்




**எரேமியா 18:6** கூறுகிறது **"இதோ, இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்."** என்று. இது ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாக இருக்கும் விசுவாச மக்களான நமக்கும் பொருந்தும். நாம் **எரே 18:1-10** வசனங்கள் வரை படிக்கும்பொழுது, அங்கு கர்த்தர் எரேமியாவை குயவன் வீட்டிற்கு போக சொல்கிறார். அப்பொழுது **"அப்படியே நான் குயவன் வீட்டிற்குப் போனேன்; இதோ, அவன் திரிகையினாலே வனைந்துகொண்டிருந்தான். குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறேபாண்டமாக வனைந்தான்." (எரே 18:3-4).** இங்கு குயவன் தன் சித்தத்தின்படி அந்த களிமண் உருவாகாததால் அதை திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்.

இதன் மூலம் ஆண்டவர் **எரே 18:7-10** வசனங்களில் பின்வருமாறு கூறுகிறார், **"பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில், நான் விரோதமாய்ப் பேசின அந்த ஜாதியார்**

**தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன். கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு. அவர்கள் என் சத்தத்தைக்கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்**". இங்கு நாம் அறிந்துகொள்கிற சத்தியம், முதலாவது குயவனே நாம் எப்படிப்பட்ட பாத்திரமாய் இருக்க வேண்டும் என்று முடிவு செய்கிறார்.

**ரோ 9:21** கூறுகிறது "**மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ?**", மண்ணாகிய நம்முடைய வேலை, குயவன் கையில் அவர் நினைத்தபடி வனையும்படியாய் இசைந்துகொடுக்க வேண்டும். அப்பொழுது தேவன் நம் வாழ்க்கையில் வைத்துள்ள திட்டங்கள் யாவும் நேர்த்தியாய் நிறைவேறும். ஒருவேளை ஆண்டவர் நம்மை வனையும்பொழுது, நாம் அதற்கு இசையாமற் போனால் **எரே 18:4** இல் கூறப்பட்டுள்ளபடி, குயவன் கையிலே கெட்டுபோன மண்பாண்டமாய், உபயோகமற்றவர்களாய் மாறிவிடுவோம். ஆகிலும் இன்னும் நாம் அவர் கையில் தான் இருக்கிறோம். எனவே திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைகிறார்.

இங்கு நாம் அறிந்து கொள்ளும் மூன்று காரியங்கள். (1) திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, (2) தன் பார்வைக்குச் சரியாய் மற்றும் (3) வேறே பாண்டமாய். நாம் அவருக்கு ஒத்துழைக்காததினால் தேவன் களிமண்ணாகிய நம்மை தூக்கி எறிந்துவிடுவதில்லை. மறுபடியும் திருத்தமாய் அதை செய்ய முயல்கிறார். ஒருவேளை நாம் முதல் தடவை கெட்டுபோயிருந்தாலும் மற்றொரு வாய்ப்பிலாவது ஆண்டவருக்கு இசைந்து நம்மை உருவாக்க அவர் சித்ததிற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்பொழுது நாம் பிரயோஜனமுள்ள பாத்திரமாய் மாறுவோம்.

ஆனால் நாம் நம் சுயசித்தத்தின்படி நம் வாழ்க்கையை நடத்த நினைத்தாள், நஷ்டம் நமக்குதான் ஒழிய அவருக்கில்லை. அவர் தன் பார்வைக்குச் சரியாய் கண்டபடி நம்மை வனைகிறார். ஒருவேளை நம் வாழ்க்கை தாறுமாறாய் சென்று கனவீனமான பாத்திரம் போல்

காணப்பட்டாலும் அல்லது கெட்டுபோன / பிரயோஜனமில்லா பாத்திரம்போல் காணப்பட்டாலும், ஆண்டவருக்கு நாம் நம்மை அவர் சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கும்பொழுது, அவர் தன் பார்வைக்குச் சரியாய் கண்டபடி மறுபடியும் நம்மை வேறோரு பிரயோஜனமான பாத்திரமாய் மாற்றுகிறார். அதேவேளையில் கனமான பாத்திரமாய், பிரயோஜனமான பாத்திரமாய் உருவாக்கப்பட்டிருந்தாலும், அதற்கேற்ற விதமாய் நாம் கிரியை செய்யாத பட்சத்தில் எரே 18:9,10 வசனங்கள் கூறுகிறபடி, கனமான பாத்திரமாய் இருந்தும் அதற்குரிய பிரயோஜனம் (நன்மை), நம்மில் உண்டாகாதபடிக்கு, கர்த்தர் மனம் மாறுவார்.

ஒருவேளை நாம் கனவீண பாத்திரமாய் உருவாக்கப்பட்டிருந்தாலும், ஆண்டவருடைய சித்ததிற்கு அர்பணித்து, சாதாரண நிலையிலும், அவருக்கு பிரயோஜனமாய் காணப்படுவோமானால், நம்மை உயர்த்திட தேவன் வல்லவராய் இருக்கிறார். எனவே நாம் சொல்ல வேண்டியதெல்லாம், பக்தன் பாடியதுபோல

**என்னை உம் கையில் படைத்தேன் முழுவதுமாய்**

**என்னையும் பயன்படுத்தும்**

**குயவன் நீர், களிமண் நான்**

**உம் சித்தம் நிறைவேற்றுமே.**

ஆமென் அல்லேலூயா.